## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆவணித் திங்கள் 03–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.358/2020 –ல்**

**வழக்கிடை விண்ணப்ப எண்.03/2025**

**I.அரியபுத்திரன் ... மனுதாரர்/01–ஆம் பிரதிவாதி.**

**–எதிர்–**

**1. I. மாரியப்பன் ... எதிர்மனுதாரர்/வாதி.**

**2. கிளை மேலாளர்**
**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**
**சின்னனூர் கிளை ... எதிர்மனுதாரர்/02–ஆம் பிரதிவாதி.**

இந்த மனு 08.08.2025-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு. M. கோவிந்தராஜன்** அவர்களும் 02-ஆம் எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல்செய்யாத நிலையில் 01-ஆம் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு. C. ராஜசேகரன்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந் நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

கூடுதல் வாதுரை தாக்கல்செய்வதற்கு அனுமதி அளிக்கக் கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டடத்தின **08**-ஆம் வகுமுறை -யின் **09**-ஆம் விதியின்கீழ் மனுதாரர்/01-ஆம் பிரதிவாதி இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார்.

**மனுவின் சுருக்கம்**

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் 01-ஆம் பிரதிவாதி ஆவார். மனுதாரர் 15.03.2021-ஆம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல்செய்தார். தற்போது எதிர்வழக்குரையை பரிசீலித்துபார்த்தபோது இந்த வழக்கை முடிவு செய்வதற்கு தேவையான சில தலையாய சங்கதிகள் எதிர்பாராதவிதமாக சொல்லாமல் விடப்பட்டுள்ளது என்று தெரியவந்தது. அந்த சங்கதிகளை கூடுதல் வாதுரை மூலம் சொல்ல வேண்டியது அவசியமாக உள்ளது. ஆகையால், கூடுதல் வாதுரை தாக்கல்செய்வதற்கு மனுதாரருக்கு அனுமதி வழங்க வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

02. மனுதாரர்/01-ஆம் பிரதிவாதி 15.03.2021-ஆம் தேதியன்று விரிவான எதிர்வழக்குரை தாக்கல்செய்துள்ளார். 26.03.2025-ஆம் தேதி -யன்று வாதி தரப்பு 01-ஆம் சான்றாளர் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம் வாதி தரப்பில் மொத்தம் 15 சான்றாவணங்கள் குறியீடு செய்யப் பட்டுள்ளன. வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை குறுக்குவிசாரணை செய்வதற்காக வழக்கு பலமுறை ஒத்திவைப்பட்டுவருகிறது.

03. வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை மனுதாரர்/01-ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யாமல் கூடுதல் வாதுரை தாக்கல்செய்ய வேண்டுமென்று கோரி இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார். கூடுதல் வாதுரையில் மனுதாரர்/01-ஆம் பிரதிவாதி சொல்லியுள்ள சங்கதிகள் பொய். வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள முதன்மையான சங்கதிகளில் சிலவற்றை எதிர்வழக்குரையில் மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ளார். வழக்கை

காலதாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆகையால், இந்த மனுவை தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

**04. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

**தீர்முடிவு**

05. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. கூடுதல் வாதுரை தாக்கல்செய்வதன் மூலம் மனுதாரர்/01-ஆம் பிரதிவாதி முற்றிலும் புதிய சங்கதிகளையோ ஏற்கனவே எதிர்வழக் குரையில் சொல்லியுள்ள சங்கதிகளையோ ஏற்கனவே எதிர்வழக்-குரையில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் முரண்பட்ட சங்கதி-களையோ சொல்லவில்லை என்று தெரிகிறது. கூடுதல் வாதுரை தாக்கல்செய்வதன் மூலம் எதிர்மனுதாரருக்கு சேர்ந்தடைந்துள்ள வாதம் எதுவும் பரிக்கப்படபோவதில்லை என்று தெரிகிறது. இந்த மனுவை அனுமதித்து கூடுதல் வாதுரை தாக்கல்செய்ய அனுமதி வழங்குவதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித அநீதியும் விளையாது என்று இந் நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் காலதாமதத்தால் எதிர்மனுதாரர்/ வாதிக்கு ஏற்பட்ட இன்னலை ஈடுசெய்ய 800/-(எண்ணூறு மட்டும்) உரூபாயை செலவுத்தொகையாக எதிர்மனுதாரர்/வாதிக்கு மனுதாரர்/01 ஆம் பிரதிவாதி கொடுக்க வேண்டுமென்று நிபந்தனை விதிப்பது உகந்ததாக இருக்கும் என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**இறுதிமுடிவு**

06. இறுதியாக, 29.08.2025-ஆம் தேதியன்றுக்குள் மனுதாரர்/01 ஆம் பிரதிவாதி எதிர்மனுதாரர்/வாதிக்கு 800/-(எண்ணூறு மட்டும்) உரூபாயை செலவுத்தொகையாக கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. தவறினால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படும்.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே.புகழேந்தி,**
**மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

**உண்மை/வரைவு ஆணையுரை**
**வ.வி.எண்.03/2025 in மு.வ.எண்.358/2020**
**நாள் 19.08.2025**